**சபரகமுவ பல்கலைக்கழகம் - 2019**

-------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமொன்றாக அமையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எமும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் பல்கலைக்கழகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் காலாவதியான வைப்பு ரூபா 2,602,716 இனை திரண்ட மிகைக்கு சீராக்காது ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்கும் போது திரண்ட மிமைக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து மூலதன அன்பளிப்பாக கிடைத்த ரூபா 10 மில்லியனை மீண்டெழும் அன்பளிப்பாகக் கருதி மீளாய்வாண்டிற்குரிய வேறுபட்ட வருமானமாக (Differed income) கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ரூபா 15 மில்லியன் தொகையை 2019 ஆண்டு ஜுலை மாதத்தில் பெற்றுத்தந்ததுடன், அதனை மூலதன மற்றும் மீண்டெழும் என வேறுபடுத்திருக்கவில்லை. அதனால் தொழில்நுட்ப பீடத்தை ஆரம்பிப்பதற்காக தேவையான மீண்டெழும் செலவினத்திற்காக போதியளவு தொகையொன்று மீண்டெழும் அன்பளிப்பாக கணக்கீடு செய்யப்பட்டது. | மூலதன மற்றும் மீண்டெழும் வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீட செய்ய வெண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் பராதீனம் செய்யப்பட்ட அலுவலக மற்றும் கணனி உபகரணங்கள் 641 உருப்படிகளில் கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆண்டு இறுதியில் ஏலவிற்பனை செய்யப்பட்ட நடைமுறையள்ளாத சொத்துக்களில் பெறுமதியை சரியாக இனங்கண்டவுடனேயே அவைற்றை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொதுக்களை பராதீனம் செய்யும் போது சரியான பேரேட்டு கணக்குகளில் குறித்த சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 70,478,571 கூட்டுத்தொகையான 10 நானாவித கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கு 2019 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கடன்கொடுத்தோர் மீதிகளிற்கிடையில் இரண்டு ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 920,883 தொகை தொடர்பாக அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முடியும் வரையும் செலுத்த முடியாது. நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்களிற்காக இறுதி | கடன்கெடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பட்டியல் முன்வைக்கப்பட்டதன் பின் எஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) | 2019 ஜனவரி முதல் திசெம்பர் வரை விநியோகிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 7,260,421 ஆன 53 மீண்டெழும் முற்பணம் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 1,730,454 ஆன 15 மூலதன முற்பணங்களை தீர்ப்பதற்கு 30 நாட்கள் முதல் 270 நாட்கள் வரையான காலம் தாமதமாகியிருந்தது. | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் பிரகாரம் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | உப கட்டு நிதி விநியோகிக்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிற்கு முன்பு தீர்க்க வேண்டிய போதும், 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 60 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கருத்திட்ட, மீண்டெழும் மற்றும் ஆராய்ச்சி முற்பணம் ரூபா 10,075,944 ஆன தொகையை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் பிரகாரம் தேவையான செயற்பாடகள் எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571(1),(2) மற்றும்(3) | 2014 - 2017 காலப்பகுதிக்குரிய கேள்வி வைப்பு, நிறுத்தி வைத்தல் பணம், கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 7,816,308 | 05 ஆண்டுகளை விஞ்சி பழமையானவுடன் நிதிப்பிரமாணம் பிரகாரம் நிதி குழுவின் மற்றும் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் தீர்க்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆன காலவதியான 184 வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவை | | | |
| (i) | V ஆவது அத்தியாயத்தின் 7.6 பந்தி | 2000 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 12 உத்தியோகத்தர்களின் பிணைமுறிகள் மீறப்பட்டமை காரணமாக அறவிட வேண்டிய ரூபா 59,043,664 தொகை 2020 ஜுன் வரையிலும் அறவிடப்படவில்லை. 06 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 38,872,629 இலிருந்து 2016 ஆண்டு முதல் எவ்வித தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நான்கு உத்தியோகத்தர்களுக்கு தவணைப் பணம் செலுத்துமாறு நனைவூட்டல் கடிதம் அனுப்பியுள்ளதுடன், ஏனையவர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. | தாபன கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | வருகை மற்றும் வெளிச் செல்கை நேரங்கள் உறுதிப்படுத்தப்படாமல் கல்விசார் பதவியணிகளில் 334 பேர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 952,484,696 தொகை செலுத்தப்பட்டிருந்தது | பல்கலைக்கழக கல்விசார் பதவியணி தினதிதோரும் வருகை மற்றும் வெளிச் செல்கை குறிப்பிடாத போதும் அவர்கள் குறித்த கற்கைபிரிவுகளினரல் ஒப்படைக்கப்பட்ட விரிவுரைகளிற்கு சமுகமளித்தாக " விரிவுரைகளிற்கான வரவு குறிப்புப் பதிவேடு" இனூடாக உறுதிப்படுத்தப்பட்டு சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது | பல்கலைக்கழக தாபனக் கோவையின் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |
| (இ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 112(1) ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் தற்போது மாணவர்களாக இருப்பவர்கள் உள்ளடக்கப்பட்டு தெறிவு செய்யப்படும் மாணவர் சபையொன்று அமைக்கப்பட வேண்டிய போதும், 2020 ஜுன் வரையிலும் அந்த | மகா மாணவர் சங்கத்தின் உள்ளடக்கம் அமைவது பீடங்களின் மாணவ சங்க பிரதிநிதிகளினாலாகும். அவ்வுள்ளடக்கம் பூரணப்படாததால் இந் நடவடிக்கையை மேற்கொள்ள | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபை செயற்படு நிலைக்கு உட்பட்டிருக்கவில்லை. | முடியாதுள்ளது. | |
| (ஈ) | 2019 நவம்பர் 25 திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன சுற்றறிக்கை | உத்தியோக பூர்வ விடுதிகளில் வசிக்கும் 237 ஆளணி அங்கத்தவர்களிடமிருந்து அறவிட வேண்டிய அடிப்படை சம்பளத்தின் 10 சதவீத விடுதிக் கட்டணம் 2020 ஜூன் வரையிலும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 33 பிரிவு மற்றும் குறிப்பிடப்படும் சுற்றறிக்கையிற்கும் இடையில், உத்தியோகத்தர் என்பதை விளக்கியுள்ள விதம் வித்தியாசமாகையால் அது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஆலோசனை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 85,813,285 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 60,546,285 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 25,267,000 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மீண்டெழும் அன்பளிப்பு ரூபா 394,295,000 தொகை அதிகரித்திருந்த போதும், ஊழியர் சம்பளம் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் ரூபா 405,526,348 தொகை அதிகரித்தமை அவ் வீழ்ச்சிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் மூலம் பம்பஹின்ன – கிங்சிகுணே பாதைக்கு நீர் குழாய் புதைக்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது பல்கலைக்கழக வளவிலிருந்து விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் முங்கஸ்தென்ன கட்டிடத்திற்கு இணைய தொடர்பை வழங்கும் ஒளிபரப்பு இழைகளிற்கு மீளாய்வாண்டினுள் ஏற்பட்டிருந்த இழப்பை பழுதுபார்ப்பதற்கு இலங்கை டெலிகொம் நிறுவனத்தினால் ரூபா 1,049,015 ஆன மதிப்பீடொன்று சமர்பிக்கப்பட்டிருந்தது. ஒளிபரப்பு | நீர் குழாய் புதைக்க அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளும் போது இழப்பு ஏற்பட்டிருந்த ஒளிபரப்பு இழைகளை திருத்தித் தருமாறு குறித்த ஒப்பந்த நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

இழைகளை திருத்தித் தருமாறு குறித்த ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதும், 2020 ஜுன் வரையும் பழுதுபார்த்து இருக்காததால் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு இணைய தொடர்பு இல்லாது பீட செயற்பாடுகளிற்கு பாதிப்பாக இருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மென்பொருள் பாவணையுடன் நிலையான சொத்து பதிவேடொன்றை தயாரிக்க மற்றும் தரவுகளை உள்ளீடு செய்ய 2016 முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 1,368,300 தொகை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தியிருந்த போதும் குறித்த நடவடிக்கை 2020 மே வரையும் நிரைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | ஒப்படைக்கப்பட்டிருந்த மென்பொருளின் பிரசுர கணனிமய தகவல்கள் மற்றும் பௌதீக ரீதியாக காணப்படும் சொத்துக்கள் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அறிக்கை செய்யப்பட்டதால் கொடுப்பனவு நிருத்தப்பட்டதனால் குறித்த நிறுவனத்தினால் முன் நடவடிக்கை எடுப்பதனை தவிர்த்துள்ளது. கணனிமய தகவல் முறைமை தற்போது நிருவப்பட்டுள்ளதால் குறைபாடுகளை தவிர்த்து முன்நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | நிலையான சொத்து பதிவேட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆராய்சி கால எல்லை ஓராண்டான 10 உத்தேசங்களிற்காக 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் ஆராய்சி மானியமாக கூட்டுத் தொகை ரூபா 11,795,667 மீளாய்வாண்டில் செலுத்தியிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் இறுதி ஆராய்சி அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் அவ் அலுவலர்களிற்கு ஆராய்சி கொடுப்பனவு ரூபா 3,970,771 தொகை மீளாய்வாண்டிலும் செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் தொற்று நோய் நிலையினை கருத்திற் கொண்டு உரிய கால எல்லையினுள் பூர்த்தி செய்யப்படாத அனைத்து ஆராய்சிகளிற்காகவும் 2020 திசெம்பர் 31 வரை கால நீடிப்பொன்றை வழங்க 2020 ஜுன் 09 திகதி கூடிய பல்கலைக்கழக ஆராய்சிக் குழு தீர்மானித்துள்ளது. | உரிய கால எல்லையினுள் ஆராய்சிகளை பூர்த்தி செய்து அறிக்கை விநியோகிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரயோக விஞ்ஞான பீடத்தின் 30 பட்ட முன்மாணவர்களுக்கு ஒரே தடவையில் பயிற்ச்சி பெற முடியுமான விஞ்ஞான கூடமொன்றில் 2018 செப்தம்பர் 13 ஆம் திகதி வெடிப்பொன்று ஏற்பட்டிருந்ததுடன், அது தெடர்பாக நியமிக்கப்பட்ட புலனாய்வுக்குழு மூலம் ரூபா 617,230 அன நட்டமொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த விஞ்ஞானகூடம் 2020 ஆகஸ்ட் வரையிலும் திருத்தப்பட்டு உரிய நிலைக்கு கொண்டுவரப்பட்டு இருக்கவில்லை. | விஞ்ஞானகூடத்தில் ஏற்பட்ட வெடிப்பின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவடையும் வரை முன் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமலிருந்தது. தற்போது பழுதுபார்தல் நடவடிக்கைகள் தெரிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. | விஞ்ஞான கூடத்தை சீர் செய்து மாணவர்களின் நடைமுறை பயிற்சிகளுக்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2007 ஆண்டில் அமைச்சரவையினால் பல்கலைக்கழகத்திற்காக நிர்வாக கட்டிடமொன்றை நிர்மாணிக்க அங்கீகாரம் வழங்கியிருந்த காணியை சுவீகரித்துக் கொள்ளவது தொடர்பாக ஏற்பட்டிருந்த சட்டப் பிரச்சினையின் மீது ரூபா 1,494,543 ஆன ஆரம்ப செலவொன்றை மேற்கொண்டிருந்த போதும் கட்டிட நிர்மாண பணிகளை 2020 ஜுன் வரையும் ஆரம்பிக்க முடியாதிருந்தது. அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் அவரிற்கு உரிமை இல்லையென உறுயானதன் பின்னர், காணி சுவீகரிக்கும் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் 2019 திசெம்பர் 10 திகதி ரூபா 1,010,000 இழப்பீட்டுத் தொகை பிரதேச செயலாளரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2010 ஜுலை 29 திகதி கூட்டுத் தொகை ரூபா 30,448 ஆன இழப்பீடு மற்றும் வட்டியை பெற்றிருந்த அனுமதிப்பத்திரதாரி ஒருவர் 2020 ஜுன் வரையும் குறித்த காணியிலிருந்து விலகியிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பிற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இபுள்பே பிரதேச செயலகத்தினூடாகவே ஆகும். இது வரை காணியிலிருந்து செல்லாத அனுமதிப்பத்திரதாரி தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதும் இபுள்பே பிரதேச செயலகத்தின் ஊடாகவே ஆகும். | காணியின் உரிமையை தீர்த்துக் கொண்டு நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைகழக பதிவாளர் பதவியில் கடைமைபுரிந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றிய புலனாய்வு ஆணைக் குழுவினால் 2014 ஆண்டின் போது ஆரம்பிக்கப்ட்ட பரிசோதனை முடியாதிருந்த போதும் அவ் உத்தியோகத்தர் பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவராக 2018 ஏப்ரல் 20 திகதி முதல் நியமிக்கப்ட்டிருந்தார். | இந்த உத்தியோகத்தரின் நியமனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அவ்வாறான நியமனமொன்று தொடர்பில் தலையிட பல்கலைகழகத்திற்கு இயலாது. | இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவூட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஜுன் மாதத்தில் ரூபா 15,964,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 130 “ Desktop” கணனி இயந்திரங்கள் உரிய அளவுக் குறிப்புகளுக்கு இணங்காமை தொடர்பாக 2018 பெப்ரவரி மாதத்தின் போது மூவரை கொண்ட பரிசோதனைக் குழுவொன்று நியமிக்கப்ட்டிருந்த போதும் குறித்த பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ளாது அக் குழுவிற்கு ரூபா 110,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அக் கணனிகள் அளவுக் குறிப்புகளுக்கு இணங்குகின்றன என திருப்திப்படாது ரூபா 1,596,400 ஆன நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தகாரரிக்கு 2018 ஜுன் 21 விடிவிக்கப்பட்டிருந்தது. | குழு அறிக்கை மிக இரகசியமான அறிக்கை ஒன்றாகையால் அதனை நிதிப் பிரிவிற்கு வழங்க முடியாது எனவும் அதனை இரகசியமாக கட்டுப்பாட்டு சபையிற்கு சமர்பித்ததாகவும் உபவேந்தர் வாய் மொழி மூலம் குறிப்பிட்டார். அதனால் உபவேந்தர் அங்கீகரித்த வவுசர்களிற்காக குழு அங்கத்தவர்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டதுடன், 2018 ஜுன் 21 திகதி நிறுத்தி வைத்தற் பணத்தையும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அனைத்து கொள்வனவுகளும் பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கு இணங்க வேண்டியதுடன், குழு அறிக்கை கிடைத்துள்ளதாக எழுத்து மூல உறுதிப்பாடின்றி குழுவின் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்யக் கூடாது. |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை பெறுமதி ரூபா 315,051,433 ஆன புது நூலக கட்டிட நிர்மாணத்தின் 1 ஆம் கட்டம் 2020 ஜனவரி 09 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், 2020 பெப்ரவரி அளவிலும் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதமாக காணப்பட்டது. வேலை ஆரம்ப முற்பணம் மற்றும் முடிவுற்ற வேலைகளின் பெறுமதியாக ரூபா 83,010,286 ஒப்பந்தகாரருக்கு செலுத்தியிருந்த போதும், சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் பிரகாரம் | பிணைமுறியின் காலஎல்லையை நீடிக்குமாறு அறிவித்து குறித்த நிறுவனத்திற்கு அவ்வப்போது கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், பிணைமுறியின் தொகையை பல்கலைக்கழகத்திற்கு செலுத்துமாறு 2020 மார்ச் 03 திகதி வங்கியிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரச்சினையை தீர்த்துக் கொண்டு கட்டிடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடிவுற்ற வேலையின் பெறுமதி ரூபா 43,058,826 ஆனமையால் ரூபா 39,951,460 ஆன மேலதிக பெறுமதியொன்று ஒப்பந்தகாரரிடம் இருந்த போதும், 2020 பெப்ரவரியில் இருந்து நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி முடிவுற்றிருந்த ரூபா 72,461,829 ஆன முற்பணமுறியை பணமாக்கிக் கொள்ள அல்லது முறியின் கால எல்லையை நீடித்துக் கொள்ள முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எனினும் அச் செயற்பாடு நடைபெறவில்லை. வேளை பொறியியலாளரினால் 2019 ஒக்டோபர் 28 திகதி முதலாம் பட்டியலாக வேளைப் பெறுமதி ரூபா 43,058,826 பரிந்துரைத்துள்ள போதும் அந் நிறுவனம் 2020 பெப்ரவரி 20 வரை நிர்மாணப் பணிகளை மேற்கொண்டதனால் வேளை பெறுமதியை கணக்கிட்டு முன்வைக்குமாறு வேளை பொறியியலாளரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக காணப்படும் இறுதிப் பிரச்சினையை தீர்த்து விரைவில் கட்டிடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட 506 பதவிகளில் 140 பதவிகளும் கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்ட்ட 599 பதவிகளில் 216 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. அவ் வெற்றிடங்கள் காரணமாக மீளாய்வாண்டினுள் வெளிவாரி விரிவுரையாளர் கட்டணமாக ரூபா 14,950,474 தொகையும் விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 31,095,467 தொகையும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | தற்போது காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளக விண்ணப்பதாரிகளிடமிருந்து மற்றும் பத்திரிகை அறிவித்தலூடாக ஆட்சேர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 03 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதி முதல் 08 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 386,513 ஆன 13 கடன் மீதிகளை 2020 ஜுன் வரையும் அறவிட்டிருக்கவில்லை. | 06 ஊழியர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன், ஏனைய இருவரினது கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் 02 செலவின விடயங்களின் மூலதன ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 275,581,000 தொகை மற்றும் 03 செலவின விடயங்களில் மீண்டெழும் ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 107,459,807 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதும், அதற்காக திருத்தப்பட்ட பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப பீடம் மற்றும் மருத்துவ பீடங்களிற்காக 2018 ஆண்டு இறுதி காலாண்டில் மற்றும் 2019 ஆண்டு முதலாம் காலாண்டில் கிடைத்த பணத்தை 2019 இல் பயன்படுத்தியதால் மற்றும் ஊழியர் சம்பள அதிகரிப்பு, புதிய ஆட்சேர்ப்பு மற்றும் புதிய பீடங்களிற்கான ஆரம்ப செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதால் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டை விஞ்சி செலவு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. | ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீட்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அறிந்திருந்த போதிலும், தமது விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதனால் அவை தொடர்பான இலக்கு, அடிப்படைத் தரவுகள், இலக்கை அடைய வேண்டிய கட்டங்கள் போன்ற முன்னேற்றங்களை அறவிடுவதற்கான குறிகாட்டிகளையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை சபரகமுவ பலகலைகழகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக கவனம் செலுத்தி இனங்காணப்பட்ட நோக்கங்கள் 2018 மற்றும் 2019 வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான நீண்டகாலத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.3 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2014 ஆம் ஆண்டில் ரூபா 123,052,693 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கில் காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கட்டளையிட்டிருந்த போதிலும், ரூபா 5,156,160 பெறுமதியான நிறுத்தி | இந்த நிறுத்தி வைத்தல் பணத்தினால் மைதானத்தை தயார் செய்யும் செயற்பாடுகளுக்கான மதியுரை சேவையை பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கப்படுட்டுள்ளதுடன், அந் நடவடிக்கைகள் 2020 ஆண்டு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | விளையாட்டு மைதானத்தை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தல் பணத்தை பயன்படுத்தி விளையாட்டு மைதானத்தை சீர் செய்வதற்கு 2020 ஜுன் வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் அச்சகத்தில் உள்ள ஒப்செட் அச்சு இயந்திரம் 2016 ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2020 ஜுலை வரையும் விளைவற்றுக் காணப்பட்டதால் அச்சகமே மூடிவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக பல்கலைக்கழகத்தின் அச்சிடும் நடவடிக்கைகளை தனியார் துறையினரிடம் நிரைவேற்றிக் கொள்ள மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டில் ரூபா 3,703,955 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இந்த அச்சு இயந்திரம் தொடர்பாக முறையான தொழிநுட்ப பரிந்துரையை பெற்று பழுதுபார்க்கும் சாத்தியப்பாட்டு ஆய்வை மேற்கொண்டு விரைவில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அச்சகத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவர வேண்டும். |